**செய்தி வெளியீடு எண்: 431** **நாள்: 17.07.2019**

**<u>இணையதள பொறியியல் மாணாக்கர் சேர்க்கையில் எந்த வித முறைகேட்டிற்கும் இடம் இல்லை</u>**

**<u>தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் தகவல்</u>**

பொறியியல் மாணாக்கர் சேர்க்கையில் முறைகேடு என சில நாளிதழ்களில் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது முற்றிலும் தவறான செய்தியாகும். இணையதள பொறியியல் கலந்தாய்வு 100% வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற்று வருகிறது. எந்தவித முறைகேட்டிற்கும் இடமில்லை. பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சார்ந்த பேராசிரியர்கள் குழு சுழற்சி முறையில் மிகத் துல்லியமாக மாணாக்கர் சேர்க்கைப் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது. ஆகவே, மாணாக்கர்கள் இதுபற்றி குழப்பம் அடையத் தேவையில்லை. ஏதேனும் புகார் இருந்தால் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும் DoTE புகார் மையத்தில் ( 2235 1014 / 2235 1015) என்ற எண்ணில் மாணாக்கர்கள் தகவல் தெரிவிக்கலாம். மேலும் மின்னஞ்சல் முகவரி tnea2019enquiry@gmail.com மூலமாகவும் மாணாக்கர்கள் புகார் தெரிவிக்கலாம்.

பொதுவாக மாணாக்கர்கள் இணையதள பதிவின்போது பெறுகின்ற பயனீட்டாளர் எண்( User Id No ) மற்றும் கடவுச்சொல்லை (Password) எவரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதுபற்றி விழிப்புணர்வு

செய்து வருவது மட்டுமின்றி, சான்றிதழ் சரிபார்ப்பின் போது User Id / Password எவரிடமும் தெரிவிக்கக்கூடாது என உறுதிமொழி படிவத்தை மாணாக்கர் மற்றும் பெற்றோரிடம் சான்றொப்பம் பெற்ற பின்னரும் சிலர் இதை கடைபிடிக்காமல் இருந்து வருகின்றனர். இருப்பினும் DoTE கட்டுப்பாட்டு அறைக்கு 2235 1014 / 2235 1015 என்ற எண்ணில் தெரிவித்தால் உடனடியாக உதவும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மாணாக்கர்கள் எவரும் தங்களது User Id / Password யை எவருக்கும் தெரிவிக்கக்கூடாது. அது மாணாக்கர்களுக்கு பாதிப்பாகிவிடும் என மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது. ஏதேனும் சந்தேகம் என்றால் மாணாக்கர்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள TFC மையத்தை அணுகி வழிகாட்டுதல் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**